## 110. எனக்காய் நீர்பட்ட கல்வாரி

பல்லவி

எனக்காய் நீர்பட்ட கல்வாரி பாடுகள்
என்னுள்ளம் உருகிடுதே
குருதி வெள்ளமாய் உந்தன் சரீரத்தில்
புரண்டு வருகிறதே

சரணங்கள்

1. பாவி நானே ஐயா - நீர்
பாதகன் போல் தொங்கினீர்
எனது பாவங்கள் நீர் சுமந்ததால்
பாவியாய் ஆனீரே
- எனக்காய் நீர்பட்ட

2. என் சாபம் சுமந்துகெண்டிர்
என் துக்கம் ஏற்றுகெண்டிர்
அடிக்கப்படும்படி ஒப்புகொடுத்து
மவுனம் காத்து நின்றீர்
- எனக்காய் நீர்பட்ட

3. எனது தண்டனை ஏற்றீர்
உந்தன் சிலுவையிலே
எனது பழியை நீரே ஏற்று
சுமந்து சென்றீரே
- எனக்காய் நீர்பட்ட